தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 6, திருவள்ளுவர் ஆண்டு–2051

2020 மார்ச் 19, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.”

உணவுப் பொருள்களை விளைவிப்பவர்கள் உழவர்களே. எனவே, உலக மக்களைத் தாங்குகின்ற உழவர்கள், உலக மக்களாகிய தேருக்கு அச்சாணிபோல் உறுதுணையாக உள்ளனர்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. வே. தம்புசாமி அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. வே. தம்புசாமி அவர்கள் 7–3–2020 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி அவர்கள் 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் திருவாரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.